உ

சிவமயம்



சரசாலை வடக்கு

சாவகச்சேரி

# சரவணமுத்து சின்னப்பு


அவர்களின்

# நினைவு மலர்

29-08-1999

920

2007



# அமரர் சரவணமுத்து சின்னப்பு

மண்ணில்:
05-04-1916

விண்ணில்:
30-07-1999

## திதி வெண்பா

ஆண்டாம் பிரமாதி ஆடித் திங்களிற்
பூண்ட திதி அபரதுவிதியை — வேண்டுதலால்
சரவண முத்துசின் னப்பு வாழ்வகன்று
அரனடி சேர்ந்தார் அறி.

உ

சிவமயம்

# திருமுறைகள்

## விநாயகர் வணக்கம்

கஜானனம் பூதகணாதி சேவிதம்
கபித்த ஜம்பூ பலசார பசக்ஷிதம்
உமா சுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்

## தேவாரம்

தந்தையார் தாயாருடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தமாரே
வந்தவாறெங்ஙனே போமாறேதோ
மாயமாமிதற்கேதும் மகிழவேண்டாம்
சிந்தையீருமக் கொன்று சொல்லல் கேண்மின்
திகழ்மதியும் வாளரவுந் திளைக்கும் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்றெழுவார்க்கிரு விசும்பிலிருத்தலாமே.

## திருவாசகம்

பொய்யவ னேனைப் பொருளென வாண்டொன்று
பொத்திக் கொண்ட
மெய்யவ னேவிட்டிடுதி கண்டாய்
விடமுண் மிடற்று
மையவனே மன்னு முத்தர கோசமங்
கைக்கரசே
செய்யவ னேசிவ னேசிறி யேன்பவந்
தீர்ப்பவனே.

## திருவிசைப்பா

தனதனற் றோழா சங்கரா சூழ
பாணியே தாணுவே சிவனே
கனக நற்றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள் மூன்றுடையதோர் கரும்பே
யனகனே குமர விநாயக சனக
வம்பலத் தமரச சேகரனே
யுனகழலிணை என் நெஞ்சினுள் இனிதாய்த்
தொண்டனே னுகருமா நுகரே.

## திருப்பல்லாண்டு

புரந்தரன் மாலயன் பூசலிட்டோல மிட்
டின்னம் புகலரிதாய்
இரந்திரந் தழைப்பதென் உயிராண்ட கோவினுக்
கென்செய வல்லமென்றுங்
கரந்துங் கரவாத கற்பகனாகிக்
கரையில் கருணைக்கடல்
பரந்தும் மிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

காலனையும் வென்றோம் கடுநரகம் கைகழன்றோம்
மேலை இரவினையும் வேர் அறுத்தோம் - கோல
அரனார் அவிந்தழிய வெந்தீ அம்பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து.

## திருப்புகழ்

கருவினுருவாகி வந்து வயதளவிலே வளர்ந்து
கலைகள் பலவே தெரிந்து — மதனாலே
கரியகுழல் மாதர் தங்கள் அடிசுவடு மார்புதைந்து
கவலைபெரிதாகி நொந்து — மிகவாடி
அரகர சிவாயவென்று தினமு நினையாமல் நின்று
அறுசமய நீதியொன்று — மறியாமற்
அசனமிடுவார்கள் தங்கள்மனைகள் தலைவாசல்நின்று
அநுதினமு நாணமின்றி — யழிவேனோ
உரகபடமேல்வளர்ந்த பெரியபெருமாளரங்கர்
உலகளவு மால்மகிழ்ந்த — மருகோனே
உபயகுல தீபதுங்க விருதுகவிராஜசிங்க
உறைபுகலி யூரிலன்று — வருவோனே
பரவைமனை மீதிலன்று ஒரு பொழுது தூதுசென்ற
பரமனருளால் வளர்ந்த — குமரேசா
பகையரசர் சேனை கொன்று அமரர்சிறைமீளவென்று
பழமலை மீதில் நின்ற — பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்

''உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.''

உ
சிவமயம்

# துன்பங்களை நீக்கி இன்பம் தந்தருளும் பதிகம்

## முதலாம் திருமுறை

திருநெடுங்களம் பண்: பழந்தக்கராகம்

இப்பதிகத்தை ஓதுவதால் இறையருள் எளிதில் கிட்டும். இறையருள் ஒன்றிருந்தால், மற்றவையெல்லாம் கைகூடும். இறையருளால் சூரியனைக் கண்ட பனிபோல நமது துன்பங்கள் யாவும் அழிந்து இன்பம் பெருகும். தினமும் இப்பதிகத்தை ஓதுதல் நம் அனைவரின் கடமையாகும். வீட்டில் அமைதியும், மங்களமும் ஏற்படும்.

திருச்சிற்றம்பலம்

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே என்றுனைப் பேசினல்லால்
குறையுடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே. 1

கனைத்தெழுந்த வேண்டிரைசூழ் கடலிடை நஞ்சு தன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த திருந்திய தேவ நின்னை
மனத்தகத்தோர் பாடல் ஆடல் பேணியிராப் பகலும்
நினைத்தெழுவார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே. 2

நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத
என்னடியான் உயிரை வவ்வேல் என்றடற் கூற்றுதைத்த
பொன்னடியே பரவி நாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே. 3

மலைபுரிந்த மன்னவன்றன் மகளையோர் பால் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கை தங்கும் அவிர்சடை யாரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவநின் தாள்நிழற்கீழ்
நிலைபுரிந்தார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே. 4

பாங்கினல்லார் படிமஞ்செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கி நல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கித்
தாங்கி நில்லா அன்பினோடுந் தலைவநின் தாள்நிழற்கீழ்
நீங்கி நில்லார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே. 5

விருத்தனாகிப் பாலனாகி வேதமோர் நான்குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடைமேற் கரந்தாய்
அருத்தனாய ஆதிதேவன் அடியிணையே பரவும்
நிருத்தர் கீதர் இடர்களையாய் நெடுங்கள மேயவனே. 6

கூறுகொண்டாய் மூன்றுமொன்றாக் கூட்டியோர் வெங்கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென்று எம்பெருமான் அணிந்த
நீறுகொண்டார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே. 7

குன்றின் உச்சிமேல் விளங்கும் கொடிமதில் சூழ் இலங்கை
அன்றி நின்ற அரக்கர்கோனை அருவரைக்கீழ் அடர்த்தாய்
என்று நல்ல வாய்மொழியால் ஏத்தி யிராப்பகலும்
நின்று நைவார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே. 8

வேழவெண்கொம் பொசித்தமாலும் விளங்கிய நான்முகனும்
சூழவெங்கும் தேட ஆங்கோர் சோதியுளாகி நின்றாய்
கேழல் வெண்கொம் பணிந்தபெம்மான் கேடிலாப்பொன்னடியின்
நீழல்வாழ்வார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே. 9

வெஞ்சொல் தஞ்சொல் லாக்கிநின்ற வேடமிலாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியருந் தத்துவமொன் றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியால் தோத்திர நின்னடியே
நெஞ்சில் வைப்பார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே 10

நீடவல்ல வார்சடையான் மேய நெடுங் களத்தைச்
சேடர் வாழும் மாமறுகிற் சிரபுரக்கோன் நலத்தால்
நாடவல்ல பனுவன்மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே. 11

திருப்பழனம் பண்: தக்கேசி

வேதம் ஓதி வெண்ணூல்பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதம் சூழப் பொலிய வருவார் புலியின் உரிதோலார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா என நின்று
பாதந் தொழுவார் பாவந்தீர்ப்பார் பழன நகராரே.

திருவண்ணாமலை பண்: தக்கேசி

பூவார்மலர் கொண்டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று மூவர்க்கருள் செய்தார்
தூமா மழைநின் றதிர வெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமாம் பிணைவந் தணையுஞ் சாரல் அண்ணாமலையாரே.

அல்லாடரவம் இயங்கும் சாரல் அண்ணாமலை யாரை
நல்லார் பரவப் படுவான்காழி ஞானசம்பந்தன்
சொல்லால் மலிந்த பாடலான பத்தும் இவைகற்று
வல்லார் எல்லாம் வானோர் வணங்க மன்னிவாழ்வாரே.

கோயில் பண்: குறிஞ்சி

செல்வ நெடுமாடஞ் சென்று சேண் ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே.

திருச்சிற்றம்பலம்

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று."

— திருக்குறள்

## சரசாலையூர் சரவணமுத்து சின்னப்பு அவர்கள் அமரத்துவம் அடைந்ததையொட்டிய நினைவுப் பூக்கள்

அமரர் சரவணமுத்து சின்னப்புவின்

# வாழ்க்கை வரலாறு

இயற்கை அன்னையின் எழில் கொஞ்சும் ஈழ மணித் திருநாட்டின் வடபால் சைவத்தைக் காத்து தமிழை வளர்த்த சான்றோர் பலரை ஈன்றெடுத்த பெருமை கொண்டது யாழ்நகர். இந்நகரின் கீழ்பால் கனி மரங்களையும் கவினுறு சோலைகளையும் கொண்டது தென்மராட்சிப் பெரும்பிரிவு. இப்பிரிவின் வடபகுதியாக அமைந்துள்ளது கழனிகளையும் காடுகளையும் தன்னகத்தே கொண்ட சரசாலை என்ற ஊர். இவ்வூரின்கண் காராளர் குலத்துதித்த சரவணை சரவணமுத்து - தங்கமுத்து தம்பதிகளின் இல்லறம் நல்லறமாக அவர்களது ஏழாவதுகுழந்தையாக 1916 ம் வருடம் வைகாசித்திங்கள் 4 ம் நாள் ஆண் குழந்தையொன்று அவதரித்தது. அதற்கு சின்னப்பு என்று பெயரிட்டுச் செல்லமாக வளர்த்தனர்.

ஆரம்பக் கல்வியை ஊர்ப் பாடசாலையில் முடித்துக் கொண்ட சின்னப்பு தந்தை வழி நின்று விவசாயத்தை மேற் கொண்டார். வன்னிப் பகுதி சென்றும் தனது விவசாயத்தைப் பெருக்கி வருமானத்தைப் பெருக்கினார். இளைஞனான சின்னப்பு வைத்திலிங்கம் — முத்துப்பிள்ளை தம்பதிகளின் மகளைக் கைப்பிடித்து இல்லறம் நடத்தினார். அவர்கள் தம் இல்லறம் நல்லறமாக நான்கு ஆண் மக்களும் ஒரு பெண்மகவும் பிறந்தனர். பெண் மகள் இடையில் காலமாகிவிட ஆண் மக்களின் வாழ்க்கையுயர்ச்சியிலே பெருமகிழ்ச்சி கண்டார் சின்னப்பு.

''தக்கார் தகவிலர் என்ப அவரவர்
எச்சத்தாற் காணப் படும்'' என்பதற்கிணங்க அவர் தம் புத்திரர்களை நன்கு கல்வி கற்க வைத்து உயர் நிலைக்கு கொண்டு வந்தார். தலைமகன் செல்வராஜா (யாழ். பல்கலைக்கழக நூலகம்) நல்லூர் இராசையா மகள் கமலாதேவியை மணந்து சசிகலா, பிரபகலா, நித்தியகலா, ஸ்ரீப்பிரியா, ஜெகப்பிரியா என்ற பேரக் குழந்தைகளையும், அடுத்த மகன் மன்மதராஜா (கணக்காளர், கச்சேரி, முல்லைத்தீவு) மானிப்பாய் சிவசுப்பிரமணியம் மகள் சொரூபவதி என்பவரை மணந்து றாகுலா, மதுலா, கேசவன்

என்ற பேரக்குழந்தைகளையும், சற்குணராஜா என்பவர் (விவசாயம்) மட்டுவில் திருநாவுக்கரசு மகள் சாந்தியை கைப்பிடித்து பிருந்தி, மதுரா, சித்தா, அஜந்தன் என்ற பேரக் குழந்தைகளையும், கடைக் குட்டி நகுலராஜா (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி) சரசாலை வடக்கு சபாநாயகம் மகள் கோதையை (விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை) துணைவியாக்கி பிரதாபன், சுஜன், கார்திகன் என்ற பேரக் குழந்தைகளையும் சின்னப்புவிற்கு கொஞ்சி விளையாட பெற்றுக் கொடுத்தனர்.

சின்னப்பு என்ற விருட்சம் சசிகலா சுவேந்திரராஜா (ஜேர்மனி) என்ற பேர்த்தி மூலம் சுயன், சுகானா என்ற பூட்டப் பிள்ளை களையும் கண்டு பெருவிருட்சமானது. பிள்ளைகள் தங்கள் தொழில் நிமித்தம் பிரிந்து வாழ சின்னப்பு அவர்கள் மனைவியுடன் சரசாலை யிலே வாழ்ந்து வந்தார். காலம் கணக்கு சரிவர 1999 ம் ஆண்டு ஆடித் திங்கள் 30 ம் நாள் வெள்ளிக்கிழமை அதிகாலை ஆண்டவன் திருப்பாதத்தை சரணடைந்தார். மரணம் என்பது நிச்சயம். அதை யாராலும் வெல்ல முடியாது. அமரத்துவம் அடைந்த திருவாளர் சரவணமுத்து சின்னப்பு அவர்களின் ஆத்ம சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போமாக.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''

— திருக்குறள்

''துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை''

''ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து''

— திருக்குறள்

# பொது

## பாலூட்டும் தாயின் அன்றாட போசாக்குத் தேவை

| | | |
|---|---|---|
| சக்தி | 2650 | கிலோ கலோரிகள் |
| புரதம் | 46 | கிராம் |
| விற்றமின் A | 1200 | மைக்கிரோ கிராம் |
| விற்றமின் D | 10 | மைக்கிரோ கிராம் |
| தயமின் | 01.3 | மில்லி கிராம் |
| ரிபோப்லேவின் | 01.7 | மில்லி கிராம் |
| நியசின் | 17.4 | மில்லி கிராம் |
| போலிக் அமிலம் | 300 | மைக்கிரோ கிராம் |
| விற்றமின் $B_{12}$ | 02.5 | மில்லி கிராம் |
| கல்சியம் | 30 | மில்லி கிராம் |
| இரும்பு | 1000 | மில்லி கிராம் |

## ஒரு கர்ப்பிணித்தாயின் நாளாந்த போஷாக்குத் தேவைகள்

| | | |
|---|---|---|
| சக்தி | 2100 | கிலோ கலோரிகள் |
| புரதம் | 38 | கிராம் |
| விற்றமின் A | 750 | மைக்கிரோ கிராம் |
| விற்றமின் D | 10 | மைக்கிரோ கிராம் |
| தயமின் | 01 | மில்லி கிராம் |
| ரிபொப்லேவின் | 1.5 | மில்லி கிராம் |
| நியசின் | 13.8 | மில்லி கிராம் |
| போலிக்அமிலம் | 400 | மைக்கிரோ கிராம் |
| விற்றமின் $B_{12}$ | 03 | மைக்கிரோ கிராம் |
| விற்றமின் C | 30 | மில்லி கிராம் |
| கல்சியம் | 1000 | மில்லி கிராம் |
| இரும்பு | 16-32 | மில்லி கிராம் |

## ஒரு சிசுவின் நாளாந்த போசாக்குத் தேவைகள்

| | | |
|---|---|---|
| சக்தி | 820 | கிலோ கலோரிகள் |
| புரோட்டின் | 14 | கிராம் |
| விற்றமின் A | 300 | மைக்கிரோ கிராம் |
| விற்றமின் D | 10 | மைக்கிரோ கிராம் |
| தயமின் C | 0.3 | மில்லி கிராம் |
| ரைபோஃப்ளேவின் | 0.5 | மில்லி கிராம் |
| நியசின் | 5.4 | மில்லி கிராம் |
| ஃபோலிக்அமிலம் | 60 | மைக்கிரோ கிராம் |
| விற்றமின் | 20 | மில்லி கிராம் |
| கல்சியம் | 500-600 | மில்லி கிராம் |
| இரும்பு | 9-17 | மில்லி கிராம் |

# குருதியின் அமைப்பு

## குருதியின் அமைப்பு

- குருதிப் பிளாஸ்மா 55%
  - நீர் 92%
  - கரைபொருள் 8%
    - கனியுப்பு
    - போசணைப் பதார்த்தம்
    - ஒமோன்
    - வெளியேற்றும் பொருள்
    - புரதம்
      - பைபிரினோசின் (குருதி உறைவதற்கு அவசியம்)
      - அலிபியுமின் குருதியின் அமுக்கத்தை சமவளவில் வைத்திருக்க உதவுகின்றது
- குருதிக்கலம் 45%
  - செங்குருதிக்கலம் (ஒட்சிசன்)
  - வெண்குருதிக்கலம் (பாதுகாப்புக்கு)
    - பகோஸயிட் (நுண்ணங்கிகள் விழுங்கப்படுகின்றன)
    - இலிப்பியோசயிட் (விஷக்கிருமிகள்) நுண்கிருமிச் செயற்பாட்டை கட்டுப்படுத்தும் சுரப்பியைச் சுரத்தல்
  - பிளட்டிலஸ் (குருதி உறைவதற்கு)

## நித்திரை அளவு

வெவ்வேறு வயதெல்லைகளும், அவ்வயதெல்லைக்கு உட்பட்டோருக்குத் தேவையான நித்திரையின் அளவும்.

| வயது — வருடங்கள் | நித்திரை செய்ய வேண்டிய நேர வரையறை |
|---|---|
| 7—8 | 12 மணி |
| 9—12 | 11 ,, |
| 13—15 | 10 ,, |
| 16—19 | 09 ,, |
| 19க்கு மேல் | 8 ,, |

## விஞ்ஞானக் கோட்பாடுகள்

| ஆண்டு | உற்பத்திஆண்டு | பொருள்கள் |
|---|---|---|
| 1727 | 1839 | (கமரா) ஒளிப்படக் கருவி |
| 1821 | 1886 | மின்சாரயந்திரம் |
| 1867 | 1902 | வானொலியந்திரம் |
| 1884 | 1913 | காற்றில்லாத குழாய் |
| 1895 | 1913 | எக்ஸ்றே |
| 1922 | 1934 | தொலைக்காட்சி |
| 1932 | 1942 | அணுவைக் கூறுபடுத்தல் |
| 1939 | 1945 | அணுக்குண்டு |
| 1948 | 1951 | ட்ரான்ஸிஸ்டர் |
| 1953 | 1955 | சூரிய பற்றறி |

## முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள்

| இடம் | ஆரம்பித்த ஆண்டு | |
|---|---|---|
| கட்டுநாயக்கா | 1978 | மார்ச் |
| பியகம | 1983 | நவம்பர் |
| கொக்கலை | 1991 | ஜூன் |
| மீரிகந்தனை | 1993 | ஜூன் |
| பல்லேகலை | 1994 | ஏப்ரல் |

# இலங்கையின் சனத்தொகை

| குடிசன மதிப்பீட்டு ஆண்டு | சனத்தொகை | அதிகரிப்பு வீதம் |
|---|---|---|
| 1871 | 2.400 380 | — |
| 1881 | 2,759 738 | 15.0 |
| 1891 | 3,007 789 | 9.0 |
| 1901 | 3,565 954 | 18.6 |
| 1911 | 4,106 350 | 15.2 |
| 1921 | 4,498 605 | 9.6 |
| 1931 | 5,306 871 | 18.0 |
| 1946 | 6,657 339 | 25.4 |
| 1953 | 8,097 895 | 21.6 |
| 1963 | 10,582 064 | 30.7 |
| 1671 | 12,711 143 | 20.1 |
| 1981 | 14,850 001 | 16.8 |
| 1991 | 17,247 000 | 16.1 |
| 1996 | 18,315 000 | 6.1 |

## இலங்கையின் வருடச்சராசரி சனத்தொகை வளர்ச்சி வீதம்

| ஆண்டு | வளர்ச்சி வீதம் |
|---|---|
| *1871 — 1881* | *1.4* |
| *1881 — 1891* | *0.9* |
| *1891 — 1901* | *1.7* |
| *1901 — 1911* | *1.4* |
| *1911 — 1921* | *0.9* |
| *1921 — 1931* | *1.7* |
| *1931 — 1946* | *1.5* |
| *1946 — 1953* | *2.8* |
| *1953 — 1963* | *2.8* |
| *1963 — 1971* | *2.3* |
| *1971 — 1981* | *1.7* |

## அண்மைக்கால ஆண்டுச் சனத்தொகை வளர்ச்சி வீதம்

| ஆண்டு | வளர்ச்சி வீதம் |
|---|---|
| *1990* | *1.1* |
| *1991* | *1.4* |
| *1996* | *1.2* |

# இலங்கையின் சனத்தொகையின் இயற்கை வளர்ச்சி

| ஆண்டு | பருமட்டான பிறப்பு வீதம் | பருமட்டான இறப்பு வீதம் | இயற்கை அதிகரிப்பு | இயற்கை அதிகரிப்பு வீதம் |
|---|---|---|---|---|
| 1871 | 28.5 | 19.4 | 9.1 | 0.91 |
| 1881 | 27.4 | 22.7 | 4.7 | 0.47 |
| 1891 | 29.4 | 24.3 | 5.1 | 0.51 |
| 1901 | 34.4 | 27.6 | 6.8 | 0.68 |
| 1911 | 38.1 | 28.8 | 9.3 | 0.93 |
| 1921 | 37.6 | 30.4 | 7.2 | 0.72 |
| 1931 | 39.8 | 26.5 | 13.3 | 1.33 |
| 1946 | 36.8 | 23.0 | 13.8 | 1.38 |
| 1953 | 37.7 | 17.1 | 20.6 | 2.06 |
| 1963 | 37.3 | 10.4 | 26.9 | 2.69 |
| 1971 | 32.7 | 8.2 | 24.5 | 2.45 |
| 1981 | 28.0 | 6.0 | 22.0 | 2.20 |
| 1985 | 24.3 | 6.2 | 18.1 | 1.81 |
| 1989 | 21.3 | 6.2 | 15.1 | 1.51 |
| 1991 | 20.6 | 5.6 | 15.0 | 1.50 |
| 1996 | 18.6 | 6.5 | 12.1 | 1.21 |

## இலங்கையின் சனத்தொகையின் வயதமைப்பு

| வயதமைப்பு | மொத்த சனத்தொகையின் சதவீதம் | | | |
|---|---|---|---|---|
| | 1946 | 1963 | 1971 | 1981 |
| 15 வயதுக்கு குறைவு | 37.2 | 40.6 | 38.9 | 35.3 |
| 15 — 59 வயது | 57.4 | 58.1 | 54.7 | 58.1 |
| 60ம் அதற்கு மேலும் | 5.4 | 1.2 | 6.4 | 6.6 |
| தங்கியிருப்போர் வீதம் | 74.2 | 72.1 | 82.8 | 72.1 |
| பிள்ளைகளின் தங்கியிருப் போர் வீதம் | 64.8 | 69.9 | 71.1 | 60.7 |

## துறை ரீதியாக வேலையின்மை

| துறை | வேலையின்மையின் அளவு | தொழிற் படையின் சதவீதம் (ஊழியர் படை மற்றும் சமூக பொருளாதார அளவீடு 1985/86 |
|---|---|---|
| நகரம் | 236354 | 19.5 |
| கிராமம் | 567058 | 13.2 |
| பெருந் தோட்டம் | 36840 | 7.7 |
| இலங்கை | 840252 | 14.0 |

## பால் அடிப்படையில் வேலையின்மை

| பால் | தொழிற்படையின் சதவீதம் |
|---|---|
| ஆண் | 10.8 |
| பெண் | 20.8 |

## இலங்கையின் வேலையின்மை பற்றிய மதிப்பீடுகள்

| அளவீடு | | வேலையின்மை விதம் |
|---|---|---|
| வேலைவாய்ப்பு, வேலையின்மை, கீழுழைப்பு தொடர்பான மதிப்பீடு | 1959 — 60 | 10. 5 |
| சமூக பொருளாதார ஆய்வு | 1969 — 70 | 44. 3 |
| நுகர்வோர் நிதி அளவீடு 1973 | | 24. 0 |
| ஊழியர் படை, சமூக பொருளாதார மதிப்பீடு | 1980 — 81 | 15. 3 |
| நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார மதிப்பீடு | 1981 — | 11. 9 |
| ஊழியர் படை மற்றும் சமூக பொருளாதார மதிப்பீடு | 1985 / 86 | 14. 0 |
| இலங்கையின் ஊழியர் படை மதிப்பீடு | 1993 | 16. 6 |

## பொதுக் கல்வி

| வகை | 1948 | 1970 | 1996 |
|---|---|---|---|
| அரச பள்ளிக்கூடங்களின் மொத்த எண்ணிக்கை | 3,091 | 9,928 | 10.280 |
| மாணவர்களின் மொத்த எண்ணிக்கை ('000) | 1,178 | 2,716 | 4.289 |
| ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை | 32,704 | 96,426 | 195,203 |
| இதில் | | | |
| பட்டதாரிகள் (மொத்த ஆசிரியர்களின் % மாக) | 3.0 | 7.7 | 23.8 |
| பயிற்றப்பட்ட (மொத்த ஆசிரியர்களின் % மாக) | 29.2 | 50.5 | 68.1 |
| மாணவர்கள் / ஆசிரியர்கள் விகிதம் | 36 | 28 | 22 |
| ச. கி. மீற்றருக்கு பள்ளிக்கூடம் | 22 | 7 | 6 |
| | 1953 | 1971 | 1994 |
| கல்வியறிவு விகிதம் | 65.4 | 78.5 | 90.1 |
| | 1972 | 1980 | 1992 |
| வெளிச்செல்வோர் விகிதம் | 7.0 | 3.1 | 3.9 |
| | 1958 | 1984 | 1991 |
| பள்ளிக்கூடம் சேராதோர் விகிதம் | 24.3 | 14.7 | 7.7 |

## இலங்கையின் சனத்தொகை எறியங்கள் 1995—2000

| விபரம் | 1995—2000 | 2000 — 05 | 2005 — 10 | 2010 — 15 | 2015 — 10 |
|---|---|---|---|---|---|
| பருமட்டான பிறப்பு வீதம்(1000) | 17.4 | 16.2 | 15.1 | 14.0 | 12.9 |
| பருமட்டான இறப்பு வீதம்(1000) | 5.8 | 5.2 | 6.8 | 7.1 | 7.7 |
| இயற்கை வளர்ச்சி வீதம்(%) | 1.16 | 1.1 | 0.83 | 0.69 | 0.52 |
| தேறிய குடிப்பெயர்வு வீதம்(%) | -0.19 | -0.13 | -0.07 | -0.07 | -0.03 |
| சனத்தொகை வளர்ச்சி வீதம்(%) | 1.12 | 0.98 | 0.83 | 0.83 | 0.51 |
| வாழ்க்கை எதிர்பார்க்கை | | | | | |
| ஆண் | 71.1 | 71.6 | 72.0 | 72.4 | 72.8 |
| பெண் | 75.8 | 76.3 | 76.8 | 77.3 | 77.8 |

## இலங்கையின் சனத்தொகை அடர்த்தி

| வருடம் | அடர்த்தி (ச. கி. மீ. க்கு சனத்தொகை) |
|---|---|
| *1946* | *103* |
| *1953* | *125* |
| *1963* | *165* |
| *1971* | *196* |
| *1981* | *232* |
| *1986* | *250* |
| *1990* | *263* |
| *1996* | *292* |
| *2005* | *311 (அ)* |

அ) எறிவு செய்யப்பட்டது

## துறை ரீதியான வேலைவாய்ப்பு (சத விதத்தில்)


| அளவீடு | | விவசாயத் துறை | கைத்தொழிற் துறை | சேவைத் துறை |
|---|---|---|---|---|
| குடிசன மதிப்பீடு | *1953* | *53* | *12* | *35* |
| குடிசன மதிப்பீடு | *1963* | *53* | *12* | *35* |
| குடிசன மதிப்பீடு | *1971* | *50* | *13* | *47* |
| குடிசன மதிப்பீடு | *1981* | *45* | *15* | *40* |
| ஊழியர்படை மதிப்மீடு | *1992* | *39* | *24* | *37* |

# வம்சாவழி

- **சரவணமுத்து + தங்கமுத்து**
  - சின்னப்பு
- **வையித்திலிங்கம் + முத்துப்பிள்ளை**
  - (பொன்னம்மா) அன்னப்பிள்ளை

சின்னப்பு + அன்னப்பிள்ளை:

- செல்வராஜா + கமலாதேவி
  - சசிகலா + சுவேந்திரராஜா
    - சுயன்
    - சுவஜார்னா
  - பிரபகலா
  - நித்தியகலா
  - ஸ்ரீப்பிரியா
  - ஜெகப்பிரியா
- திருமஞ்சனம் (அமரர்)
- மன்மதராஜா + சொரூபநிதி
  - றாகுலா
  - மதுலா
  - கேசவன்
- சற்குணராஜா + சாந்தி
  - பிருந்தி
  - மதுரா
  - கீத்தா
  - அஜந்தன்
- நகுலராஜா + கோதை
  - பிரதாபன்
  - கஜன்
  - கார்த்திகன்



# நன்றி நவிலல்

எங்கள் சீரிய வாழ்வுக்கு வழிகாட்டியாக விளங்கிய எங்கள் அன்புத் தெய்வம், இல்லத்திற்கு ஒளி தந்த இன்ப ஜோதி அணைந்த செய்தி கேட்டு ஆறாத்துயரில் மூழ்கி அநுதாபச் செய்திகள் அனுப்பிய அன்பர்களுக்கும், மலர் மாலை வளையங்கள் வழங்கியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும், இறுதிக் கிரியைகளில் சமுக மளித்தோருக்கும், ஆன்ம ஈடேற்றக் கிரியைகள் செய்து உதவிய அந்தணக் குருமார், சைவக்குருமாருக்கும் மற்றும் பல்வேறு வகைகளில உதவி புரிந்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள அனைவருக்கும் இந் நினைவு மலரை அழகுற அச்சேற்றித் தந்த பாரதி பதிப்பகத்தாருக்கும் இன்றைய ஆத்ம சாந்திக் கிரியைகளில் பங்குபற்றியோர்க்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வணக்கம்

இங்ஙனம்

சரசாலை வடக்கு
சாவகச்சேரி.
29-08-1999

தங்களை அன்புடன் நினைவுகூரும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள.

பாரதி பதிப்பகம் 430, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்